உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.
ஸ்ரீஜ்ஞான சம்பந்த குருப்யோநம:

தென்திருப்பதியாகிய சீர்காழிவேந்தாம்
ஸ்ரீ திருஞான சம்பந்த சுவாமிகளின் மரபிலெழுந்த
கண்ணுடைய வள்ளலார் சுவாமிகளின் அருட்பெற்றவரும்,
"ஞானார்த்தோதய" மென்னும் அரியஞான கிரந்தகர்த்தாவுமாகிய
மஹான் — சாங்குசித்த சிவலிங்க நாயனாரவர்களின்

தோத்திரமணிமாலை.

இஃது
சென்னை இராயப்பேட்டையை யடுத்த ஆல்தோட்டம்,
"ஸ்ரீ சிவகணேச பக்த சமவாயத்தின்"
அடியாருளொருவராகிய, சி. மாணிக்கம் பிள்ளை,
மேடியூர் நிவாசரர்களாகிய
போ. முத்துசாமி பிள்ளை, போ. வீராகவலு பிள்ளை,
வி. எ. சுபரமண்யம் பிள்ளை, மா. இர. பொன்னரங்கம் பிள்ளை
இவர்கட் கேட்டுக்கொண்டவண்ணம்

—*—

அருட்கவி
தி. ஊ. பா. கங்காதர நாவல ரவர்களா லியற்றித்
தமது
சென்னை சேத்துப்பேட்டை,
ஸ்ரீ ஜெயவிநாயக சிவப்ரகாஸ அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

பிரமாதீச ௵ ஆடி மீ 1 உ
நாயனாரவர்களின் 14 - வது வருடத்திய குருபூஜையன்று
[illegible]டி நாவல ரவர்களா லரங்கேற்றஞ்செய்து
[illegible]ார்களுக்கு விநியோகஞ்செய்யப்பட்டது.
1913 ௵ ஜூலை மீ 16 உ

823:417
N13
147495

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஞான சம்பந்த குருப்யோநம:

தென்திருப்பதியாகிய சீர்காழிவேந்தாம்
ஸ்ரீ திருஞான சம்பந்த சுவாமிகளின் மரபிலெழுந்த
கண்ணுடைய வள்ளலார் சுவாமிகளின் அருட்பெற்றவரும்,
“பூரணாநந்தோதய” மென்னும் அரியஞான கிரந்தகர்த்தாவுமாகிய
மஹான் – சாங்குசித்த சிவலிங்க நாயனாரவர்களின்

தோத்திரமணிமாலை.

இஃது
சென்னை இராயப்பேட்டையை யடுத்த ஆல்தோட்டம்,
“ஸ்ரீ சிவகணேச பக்த சமவாயத்தின”
அடியாருளொருவராகிய, சி. மாணிக்கம் பிள்ளை,
௸டியூர் நிவாசரர்களாகிய
பொ. முத்துசாமி பிள்ளை, பொ. வீராகவலு பிள்ளை,
வி. எ. சுப்ரமண்யம் பிள்ளை, மா. இ. பொன்னரங்கம் பிள்ளை
இவர்கட் கேட்டுக்கொண்டவண்ணம்

அருட்கவி
கி. ஊ. பா. கங்காதர நாவல ரவர்களா லியற்றித்
தமது
சென்னை சேத்துப்பேடு,
ஸ்ரீ ஜெயவிநாயக சிவப்ரகாஸ அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

பிரமாதீச ௵ ஆடி ௴ 1 ௳
நாயனாரவர்களின் 14 - வது வருடத்திய குருபூஜையன்று
௸ நாவல ரவர்களா லரங்கேற்றஞ்செய்து
சிவனடியார்களுக்கு விநியோகஞ்செய்யப்பட்டது.
1913 ௵ ஜூலை ௴ 16 ௳

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.
ஸ்ரீஜ்ஞான சம்பந்த குருப்யோநம:

தென்திருப்பதியாகிய சீர்காழிவேந்தாம்
ஸ்ரீ திருஞான சம்பந்த சுவாமிகளின் மரபிலெழுந்த
கண்ணுடைய வள்ளலார் சுவாமிகளின் அருட்பெற்றவரும்,
"பூரணாநந்தோதய" மென்னும் அரியஞான கிரந்தகர்த்தாவுமாகிய
மஹான் – சாங்குசித்த சிவலிங்க நாயனாரவர்களின்

தோத்திரமணிமாலை.

சிறப்புப்பாயிரம்.

நிலைமண்டில வாசிரியப்பா.

திருநிறை ஞானச் சிவானந்த போத
அருணிறை மயமா யகண்ட தத்துவமாய்
சராசரங்க டமையெலா மருளி
பரங்கருணை யெனப் பாலித்து காத்து
வொன்றுமாய்ப் பலவா யுள்ளவா ரேத்து
மன்னுமன் பர்களின் மனக்கோயி லதனுட்
குடிகொண் டிலகுங் குணமணி விளக்காய்ப்
படிமுழு தாளும் பரம்பொரு ளதுவா
யெங்குமா யியாவுமா யெவைக்குமுன் னவனாய்த்
துங்கவான் சுடராய் சோதியுட் சோதியாய்

சருவலட் சணமாய்த் தழைத்து விளங்கும்
பெருமறைக் கருத்திற் பிறங்கிடும் பிர்மம்
சத்துடன் சித்தா னந்தம தாக
யெத்தவத் தினரு மிறைஞ்சு மிறைவனாய்
வேண்டினும் வேண்டா விருப்புடன் வெறுப்பு
யாண்டுள நினையா வபரோட்ச ஞானம்
பத்தி வைராக்கியம் பற்றிடும் பற்று
முத்தி சாதனைக்கு முதல்வன் முறைபடிச்
சிந்தை சிவமாய்த் தெளிந்தவர்த் தெளிய
பந்த நோயகற்றும் பரமக் கிருபாநிதி
உடற்பொரு ளாவிமூன் றொருப்புடன் றந்து
திடம்பெறப் போற்றுவோர்த் தெரிசிக்குந் தெய்வம்
சாந்தமே பிர்மந் தானென நிலைத்து
வேந்தனா யறிவினுள் விளங்கிடுஞ் சித்த
பேதவாதிகண் மனம் பிரமைகொண் டழிய
நாதனாய்த் துலங்கு நம்ப னம்பினர்க்கு
குருமணி சைவக் குலமணி முத்தித்
தருமணி ஞானத் தற்சொரு பந்திக
ழதீதப் பழம்பொரு ளதுயிது வென்னப்
பதிதர்த் தாஞ்சொலப் படாதஅப் பரசிவம்
வேதன்மா லிந்திரர் விஞ்சைய ரண்டர்க
ளோதினு முடிவிலா வொண்பொருட் கண்ணுட்
கலந்தொளிக் காட்டிக் காண்பானுங் காட்சியாய்ப்
புலனைந் தொடுக்கியப் போதவண் டோற்றம்
புண்ணிய வடிவமாய்ப் போதத்தின் முடிவா
யெண்ணிலாக் கலையு ளெழுந்தாடு மண்ணல்
சச்சிதா னந்தந் தாமாகி நின்று
யிச்சையற் றவரு ளிலகுஞ் சின்மயம்
பிணக்கிலா நினைவுட் பிறங்கு மாதித்தன்
கணக்கிலா வுருவமாய்க் கண்டவர்க் கண்டு
ஆசையே பூசை யறிவே சிவமாய்
நேசமா யேத்தி நின்றமெய்க் கடவுள்
சொல்லாமற் சொல்லுஞ் சூட்ச வரோதய
மெல்லாஞ் செயவல்ல வீச்சுர சொரூபம்
தன்னுடன் றலைவனைத் தரிசித் தவர்க
ளென்றுமோர் நிலையா யிறைஞ்சிடும் பூசுரன்

அறம்பொரு ளின்பம்வீ டதையடைந் துண்மைத்
திறமிகு ஞானச் செல்வர்கட் செல்வம்
மெய்யினன் மெய்யை விளக்கிய வித்தகன்
பொய்யிலா ரூழைப் போக்கிடும் புனிதன்
சைவச் சுடரொளி சத்தியப் பொக்கிஷம்
உய்வதற் கொருவழி யுரைத்த சற்குரு
தீண்டா நெருப்பு சித்விலாசம் புரி.
யாண்டவ னன்புசெ யன்பர்க் கன்பன்
மூர்த்தமாய் நிறைந்து முழுமுதற் பொருட்கும்
பாத்திர ராக்கிப் பழவினைப் பறக்க
பக்குவஞ் சொன்ன பரமார்த்த வரசு
திக்கெலாம் பணியுந் தேசிக் வுருவம்
ஊமையா யிருக்க வுளவைத் தெரிவித்
தாமையு மீன்போ லழிவினைக் காத்து
யிருவினை யற்று யேகாந்த சுழுச்சியி
லருணோ தயம்போ லனைத்தினும் வசித்து
சஞ்சித மகன்றுத் தானே தானாகிக்
குஞ்சித பதமதிற் குடியிருந் தோங்க
பெருமுத்தி சாதனம் பேசியப் பெரியோன்
றருமுத்தி சாதனஞ் சைவமென் றுரைத்தோன்
இரவு பகலற்ற வெட்டா வெளியுட்
கரதலா கமலம்போற் காணும் பூரணம்
பரவுவார்ப் பணிந்துப் பணிபுரி பவர்க்கு
ணிரந்தர மாக நிலைபெருஞ் சித்து
பார்த்ததைப் பார்த்துப் பசையற்று வுள்ளம்
வேர்த்தவர்க் குள்ளே விளங்கிடு மாதித்தன்
எத்தொழிற் படினு மிணங்கினும் வணங்கினுஞ்
சித்தஞ் சிவமாய்த் தெளிந்தமெய்த் தெளிவு
உண்ணினு முறங்கினு மொன்றையே ஞான்று
மெண்ணியே நிற்கு மெழினிறை சுகாதரம்
வாழாரை வாழ வைத்திடுங் கற்பக
மேழாம் பூமியு ளின்புறுங் களஞ்சியம்
அற்புதா காரத் தற்பரஞ் செழுமணி
சிற்பரா னந்தத் திருவருட் பொலியுஞ்
சங்கரன் விழியினிற் ஞானன் றெழுந்த
வங்கியின் பொரிசர ஹணைத்தனின் விழவே

ஆறுமுகமா யவன்வளர்ந் தமை யவட்
பேறுடன் பால்தரப் பெருமையா யருந்தி
அவுணர்கட் குலத்தை யழித்துநற் பொதிகை
தவமிகு முனிவன் றமிழ்க்கிறை யகத்தியர்த்
தன்குரு வாகி சகல சூட்சநிலை
அன்புடன் போதித் தருடனைக் கீர்த்
இன்புற வளித்து யெழி லருணகிரி
சொன்ன திருப்புகழ் சுருதிக் கிசைந்து
வரமதைத் தந்த வள்ளல்பின் னமணர்கள்
விரத மழிக்க வேண்டசீர்க் காழியிற்
சிவபாத விருதயர் சேவைக் கிதங்கி
நவமிகும் பகவதி நாயகித் தன்பால்
மகவென வுதித்து வந்தடைந் தவர்க்கு
யிகபர சாதன மீந்து மகிமையாற்
புனலினுங் கனலினும் புகழ்மிக யேட்டை
மனமுவந் தரசனும் மஹனிய ரடியர்
வந்திக்க யிட்டு மாண்புயர் சைவ
நிந்தகர் மனவலி நீடிடா தொடுக்கி
சொல்லொணு ஞானச் சொரூபானு பூதிச்
செல்வமாய் நின்றத் திருஞான சம்பந்த
வள்ளலின் மரபில் வையகம் பிழைக்க
கள்ளமில் லாது கனக சபையெனுஞ்
சுழுச்சியி னிலையிற் றூங்காமற் றூங்கி
யழுத்த மனத்துடன் பன்னிரு கலைமுடி
வதிலெழு மமிர்த மதனைவாய் மடுத்து
யெதிருக்த மின்றி யிருந்திடும் ரகசிய
மழிவிலாப் புதைய லசைக்கொணு மேரு
பழியகல் புண்ணியப் பரம வத்துவினை
அடுத்தவர்ப் பயன்பெறு மதீதமெய் யொழிவி
லொடுக்கமெய் நூலை யுரைத்தருட் சுரந்த
கலீனுடை வள்ளலே கருணை தேசிகரா
யெண்ணுதற் கரியோ னிறப்பிறப் பில்லான்
கங்கையு மழுமான் காளகண்ட முடன்
றங்கிடுஞ் சந்திர சடாதரஞ் சதுர்ப்புஜந்
திரிநேத் திரமுந் திகழர வனைத்தும்
பரிவுடன் மறைத்துப் பட்சமாய் வாதவூர்

மணிவாசகர் முனம் வரந்தர வெழுந்து
பணிகொண் டருளது பலித்திட மகிழ்ந்து
திருவா சகமதை சிறப்புட னெழுதி
வுருவிலா னுருவுகொண் டொப்புடன் களித்த
வண்ணமே யாசிர் மன்னுமெய்ஞ் ஞான
வண்ணலாய் விளங்கிய வரும்பெரும் புதையல்
அருணாச லேச்சுர வமல னாலயத்தின்
றிருத்தொண் டதனைத் தினம்வழா தாற்றியப்
புனித ராமையன் புண்ணியந் திரண்டு
தனிப்பெரும் வடிவாய்த் தனது வமிசத்தில்
ஒருங்குள மனத்து னுதயஞ்செய் பானு
பிருங்கா சயிலன் பிரபல சித்தன்
சத்தசத் துண்மையைத் தானுணர்க் கலைஞன்
தத்துவ சாஸ்திரி சாமி அரங்கையன்
உள்ளமே களிக்க வுயரில் லறமனைக்
துளஸம் மாளெனுங் கோதிலா குணவதித்
தவமெலாந் திரண்டு சார்ந்தவர்ப் பிறப்பா
மவக்கட லதனி லழுந்தி வாடாம
லின்பமா முத்தி யிரண்டற்ற போகந்
தன்னையே யடைந்துத் தான்சுகித் தென்றுஞ்
சத்தியஞ் சாந்தஞ் சதோதய சூட்சம்
நித்திய சுகநிலை சேர்படுந் தீவிரங்
காரண காரியங் கடந்தமெய்ஞ் ஞானப்
பூரணா னந்தோ தயமெனும் புனிதச்
சாத்திரந் தந்த சற்குரு சைவக்
கோத்திரம் வாழக் குண்டலி சத்தியுட்
கலந்தப் பரஞ்சுடர் கன்மநோய் மலியும்
புலனை யடக்கினோர்ப் போற்றிடும் போதம்
புண்ணிய வுருவெனப் புவிமிசைச் சனித்து
யெண்ணிலா வடியவர்க் கிரங்கியே சனிவா
யந்தரங் கத்தி லதிபக்தி யோடு
பந்த மகற்றிடும் பக்குவ முரைத்தோன்
வேட தாரிகட்போல் வெளியே திரிந்து
மாடவர்க் குகந்த வறிவிலா துழன்றுஞ்
சருவமுந் தன்னு டானிருப்ப தெனப்
பொருத்த மிலாதப் பொய்யைப் போதித்துஞ்

செய்கையுஞ் சிந்தையுஞ் சிதறுண் டழிந்து
வுய்யுமோர் நல்வழி யுணர்ந்தடங் கில்லாத்
தானெனு மமதையைத் தலைமேற் சுமந்து
வானமேற் குடியாய் வாழ்வதா யெண்ணி
மனப்பா லருந்தி மஹான்களின் றிருநெறிக்
கனவினு நினையாக் கட்டுரைப் பேசி
பெரியோற் சுருதியிற் பிழையுண் டெனவே
கரிசனை யெனவோர்க் கதைகடை பரப்பி
உலகை மயக்கு முற்பாத பிண்டங்
குலமெனப் பசப்புங் குணமிலாக் குணத்துளப்
பேதைய ரெனவீண் பெருமைக்கு நாளைச்
சாதனை யின்றித் தானிறந் தில்லாக்
கண்மணி கற்றவர்க் கலைமணி நால்வர்ப்
பண்மணி யேந்தல் பாண்டியன் கூனை
நிமிர்த்திய நாதன் நிரதிசயா னந்தத்
தமர்த்திய நாயக னடியவர்க் கன்று
வளித்த வெண்ணீற்றினை யதிதமாய் நெற்றியிற்
களிப்புடன் பூசியுங் கண்டவர்க் கிந்தும்
அரஹர வப்பனே வம்மணித் தாயெனச்
சிரந்தாழ்த்தி மகிழ்ந்த சித்விலாசக் குணம்
முழுநீறுப் பூசிய முனிவன் கண்பிசைந்து
அழுதுவா னந்தத்து ளயர்ந்தப் பிழம்பு
வஞ்ச மனமிலா வாதன் றிருழும்பரைக்
குஞ்சிரிப் புடனே கொண்டணைத் தாண்டு
வரையா தருளை வழங்கிய தேசிக
னுரைக்கொணு திருமறை வுண்மைப் பரமாஞ்
சுயம்பிர காசச் சொச்சொரூ பப்பொரு
ணயந்தவர் நயம்பெறு ஞானப் பயோதரம்
பேசா மௌனப் பேரின்பப் பதவியை
ஆசா பாச மற்றவர்க் கருளினேன்
எழுதற் கியலா யேகாந் தத்தை
முழுமுதற் கடவுளாய் முடிந்த யிடஞ்சொனேன்
வெறும் வாக்கியமஹா மேருபோ லோங்கினுஞ்
சிறுதுரும் பெனவே சிந்தையு ளாய்ந்து
எவ்வனஞ் சத்திய யிறையவ னுளனோ
வவ்வனந் தன்னை யாட்பட புகன்று

நன்மையா முத்தி நாட்டத்தி லிருத்தித்
தன்மய மாக்கிய சந்திரோ தயவொளி
கர்ம வித்தையைக் கற்றிலான் கருதிலான்
பிர்ம வித்தையைப் பேசியப் பெருமையன்
தன்னிலக் கணஞ்சரி வரத்தெரிந் தோரைப்
பொன்னிலக் கணமாய்ப் புகழ்ந்து பூரித்தோன்
வாய்ப்பந்த ரிட்டு மருள வைக்காது
தாய்க்கு மேலாகத் தான்றயைக் காட்டினேன்
காண்ட மூன்றினையுங் கருத்தினி லமைத்து
ஆண்டனு பவித்ததை யன்பர் தனக்கு
மறைக்கா துரைத்த மாசற்ற மாமணி
பிறையெனத் துலங்கும் பேச்சற்ற பீடம்
உண்மையா யுழைத்து வுயர்வுகொ டொழும்பர்க்கு
புண்ணிய வசப்படி போதித்த வாசாரியன்
அண்ட மிடியினு மலைகடல் வற்றினும்
பண்டை சூராவளிப் பாய்ந்தடித் திடினு
மெண்டிசை யொன்று யெதிர்த்தமர்ச் செயினுங்
கொண்ட நிலைவழாக் குன்றென நின்ற
மூர்த்திமெய்ஞ் ஞான முதல்வன் வினைப்போக்குந்
தீர்த்தமா யெங்குஞ் செழித்த தெய்வீகம்
வெட்ட வெளியில் விளையாடுங் கூத்தைப்
பட்டம் பகல்போலுள் பார்த்திடும் பரம்பொருள்
தன்னுயிர்ப் போல சருவாதி மூலமாய்
மன்னுயிர்க் கிதங்கிய வள்ளல் கலைதவழ்
நாசி முனையு ணடஞ்செயு நம்பனை
தேசிக னெனவந்துத் தெரிவித்த ப்ரபு
கனகாம் பரமலைக் கற்பூரச் சோதி
மனத்தைத் திருத்தி வரந்தரு மகத்துவ
மாதவச் செல்வம் மாதவப் படிநலப்
போதனைக் குருவெனப் போற்றிட யிவனுதித்
தாகமம் புராண மனைத்து நன்குணர்த்தி
போகமும் யோகமும் பொருளென மதித்து
தொம்பத முடிவையுந் தொந்தம் பந்தமிலா
அம்பலத் தரசி னந்தரங் கத்தைச்
சொல்லாமற் சொல்லிச் சுகந்தரு மெய்யன்
பல்லோர்க்கு நன்மைப் பாலிக்கு மிறைவன்

சுத்த சதாக்கிய சூக்கும நிலையும்
பெத்த முத்தர்களின் பெரும்பதி யதையு
மிருந்த விடத்தே யெளிதி லடைய
மருந்தைபோ லூட்டித்தன் வசமாய்ச் செய்தோன்
சாற்றிடு மறையுட் சமரச போக
மாற்றியே சுகத்தா லாட்பட நினைத்து
எவ்வித வவசர மெவணுதித் திடினு
மௌவியம்பேசா வமல குணத்தன்
உள்ளதை மறைத்து வுடலதை யோம்ப
கள்ள மொழியைக் கனவினும் கொள்ளா
பரமா னந்தப் பாக்கியப் பொக்கிஷம்
வரமெலாம் பலித்த மஹானு பாவன்
கருணைய னன்பர்க் கன்மனோ யகல
திருநீ றளித்த தெய்வீக சுந்தரம்
சித்தாந்த ஞானச் சிவோகங்கொள் சிவ
முத்தருண் முத்தன் முகிலென நிறைந்தோன்
மாசற்ற தற்பர வள்ளலின் சூட்சச்
தேசுட னுரைத்த சிற்சுகா னந்தம்
எதிர்ப்படு வார்க ளிடரெலாந் தொலைத்துநன்
மதிதந்துத் தனைப்போல் வாழ்விக்கும் வள்ளல்
குளவிப் புழுவைக் குணஞ்செயும் வண்ண
மளவிலாத் தொண்டரை யாட்கொண்ட சற்குரு
வள்ளுவ ருரைநேர் மனைமக்கட் செல்வ
மௌ்ளாமற் படி யில்லறம் புரிந்துத்
தன்னிழ டன்னைத் தானளந் ததுவாய்
மன்னும் பூரணத்தில் மகிழ்ந்து யெஞ்ஞான்றும்
விளங்கனி யென்ன விபரீத மற்று
களங்க மிலாதக் கனகமாய் விளங்கி
கற்பக மெனவே காத்து வாதரித்து
பொற்புயர் முத்தியிற் புகுவிக்கும் புண்ணியன்
தவலிங்க சொரூப சாங்கு சித்த
சிவலிங்க நாதன் சேவடி தனிற்சிரந்
தாழ்த்தி கைகூப்பிச் சரணடைந் தன்பால்
வாழ்த்தி வணங்குவோம் மகிழ்ந்து.

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

——0——

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞான சம்பந்த குருப்யோநம:

மஹான் - சாங்குசித்த சிவலிங்க நாயனாரவர்களின்

தோத்திரமணிமாலை.

விநாயகர் வணக்கம்.

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

மூலமும் - விருத்திக்காரண உரையும்.

சீர்மலியு மயனுந்தா மோதரனு மிந்திரன்
றேவநகர் மன்னன் சிறுவன் வல்லாளன்
னேர்மலியுஞ் சனகனகத் தியனு மௌவை
நினைந்தபடி வரந்தந்துவிக் கினங்க டீர்த்த
தார்மலி விநாயகனே புக ழுளாவுஞ்
சாங்குசித்த சிவலிங்க தேசிகர்ப்பூந் தாண்மேற்
பேர்மலியுந் தோத்திரமணிச் சூடி போற்றப்
பெருமானே நின் னருட்புரிந்தா ணம நமஸ்தே.

(இதன் பொருள்)

அழகுநிறைந்த உலகங்களைச் சிருட்டிக்கும்படி யெண்ணினவனாகிய பிர்மாவானவன் றனக்கு மேற்பட்டவர்க ளொருவருமில்லையென் றகங்கரித்துத் தொடங்கிய, படைப்புத்தொழிலிற் றனக்கிடுக்கணுண் டாக்கத்தக்க பூதகணங்களானதுற்பவித்துத் துன்பத்தை விளைவிக்கத் தாங்கமுடியாதவனாகி பயந்து வருந்திய சதுர்முகனும்,

கைலாயத்திற் பரமசிவத்தால் (பொய்ச்சொன்னதற்காக குருட்டு மலைப்பாம்பாகும்படி சாபம் பெற்றுக்கொண்டத் திருமாலும்,

புட்பத்தினா லர்ச்சனைச் செய்து முத்திப்பேறடையும்படி நந்தனவனம்வைத்துப் பூசித்து அகலிகையால் நேரிட்ட சாபத்தை நிவர்த்திச் செய்துக்கொண்ட இந்திரனும்,

முன் சனனத்திற் பஞ்சமாபாதகங்களிற் றலைவனாயிருந்தும் நினக் கோராலயங் கட்டுவித்த அரியப் புண்ணியத்தினால், மறுசனனத்தில்

தேவநகரத்திற்கு அரசனாய்ப் பிறந்து, தன் வேண்டுகோட்படி இளமைப் பருவத்திற் சுகத்தையும், முதுமைப்பருவத்தில் துக்கத்துடன் தீராதப் பிணியையுமடைந்து பிருகுதச்சு மஹாமுனிவரினால் நினது அதிமகிமை நிறைந்த பார்க்கவ புராணத்தைச் செவியாரக்கேட்டும், சந்தேகந் தெளிந்தும், அம்முனிவரின் கமண்டல சலத்தினால் நோய்த்தீர்ந்தும் முத்தியடைந்த சோமகாந்த வாசனும்,

சிந்து தேயத்திற் பல்லியெனும் பட்டணத்திற் சிறு பிள்ளைகளோடு ஆற்றோரத்தில் ஆலயமொன்றியற்றி அதிலோர்க்கல்லைவைத்து காட்டிலுள்ள இலைதழை, பூ, காய்கனிகளை, சாத்தியும், படைத்தும், கும்பிட்டும் வர தந்தையாகியக் கலியாணன், ஆண்டவன் பூசையென்று நிஞ்சித்தும் பயமில்லாது பூசையைத் தடுத்தும், கெடுத்தும், அடித்தும், வைதும், பலவித துன்பத்தை விளைவித்ததினால் கண்ணிருந்துங்குருடு, காதிருந்துஞ் செவிடு, வாயிருந்தும் ஊமையானதுடன் தொழுநோயடையுமாறு வரங்கொடுக்க மறையவனாக யெழுந்தருளி வரவும், வல்லாள கணபதி யெனப் பெயர்பெற்ற மூர்த்தமாகவும், மெய் பக்திச் செய்த சிறுவனாகிய வல்லாளனும்,

சருவந் தானாதும்படியான உண்மைஞான சித்தாந்தத்தை உள்ளபடி தெரிந்தடங்கிநில்லாது விபரீதபுத்தி மேலிட்டு வாய்ஞானத்தினால் முத்தியடைவான் வேண்டியும், பெரியோரை மதியாத மமகாரத்தினால் துன்பமுண்டாதல்போல்; நாரசமுனிவரை அசட்டையாக யெண்ணியும், கடவுள் நம்மையன்றி வேறொன்றுளதோவென்றதட்டிப்பேசவும், அதற்கம்முனிவர் மனஞ்சகியாதுச்சென்று கவுண்டிண்ய முனிவராசிரமத்திற் சிந்தாமணி விநாயகர்முன் கசிந்தழுதுச் செய்த தோத்திரத்திற்கிரங்கி ஆற்றுநோயும் பசியுமுள்ள மறையவராக யெழுந்தருளி மமகாரத்தையதப்படுத்தி பசுபதிபாசமாகிய ஒப்பற்ற சிவஞான சித்தாந்தத்தை,

" விரும்புஞ் சரிதைமுதல் மெய்ஞ்ஞான நான்கும்
அரும்புமுதல் காய்கனிபோ லன்றோ " என்பனவாய்

உபதேசஞ் செய்யும்படி நன்மையைப் பெற்ற சனகராசனும்,

இந்திரன் நந்தனவனஞ்செழிக்க மழையில்லாதுப் படுந்துன்பத்தை மாற்றும்படி (காகவடிவமாயெழுந்தருளி கமண்டல சலத்தைக் கவிழ்த்தப் போந்து தேவரீருருமாறி வந்துள்ள மகத்துவத்தை) திருவாலவாயென்னும் மதுராபுரியில் தருமி யென்னும் பிராமணனுக்காக குருமூர்த்தமாக யெழுந்தருளிய சொக்கலிங்கேஸ்வரரை இலக்கணம்படித்த கர்வத்தினால் தன்முன்னந்தோன்றியவர் சாட்சாத்கார வள்ளலாகிய பரமசிவமென்றறிந்தும் வணங்கிவரம்பெற்றுக் கொள்வதற்கான உண்மைஞானந்

தோன்றாது, ஆற்றில் விழுந்து துக்கித்துப் பின்னருணர்ந்து தன்னிலக்கணத்தை சனகனாதியர்களுக்கு உபதேசித்த வண்ணம் உபதேசிக்கத் தெரிந்து வணங்கிய நக்கீரரைப்போல) கண்டுபிடிக்காது சாமான்யமான பட்சிதானென்றுயெண்ணித் துறத்தவும் உள்ளவடிவத்தைதக்காட்டிய காலத்திற் றுதிசெய்த முத்தமிழ்க்கரசராகிய, அகத்தியமுனிவரும்,

சுந்தரமூர்த்தி சுவாமிகளி னுதவியினாற் கைலாயஞ்செல்லும் சேரமான்பெருமான் நாயனாரைக்கண்டு, அவசரமாக பக்தி செய்யுங்கால் அதைத்தடுத்து பூசையைப் பொறுமையாக நடத்தும்படி உத்தரவு கொடுத்தபடி அகவலைப்பாடி முடித்தபின் துதிக்கையினாலெடுத்துவிட முன்சென்ற அவ்வரசனுக்கு முன்னமே கைலாயப்பதவியையடைந்த சரஸ்வதியாகிய ஔவையாரும், வணங்கிய துதிக்குத் தகுந்தபடி வரங்கொடுத்து சகல இடுக்கண்களையும் நீக்கி இரட்சித்தவிநாயகக் கடவுளை மானிடப்பிறவி யெடுத்ததற்கு யேற்றப்பலனாகிய என்றுமழியாத கீர்த்தியென்னும் நிரதிசயானந்தமாகிய அரிய மகிமையை உலகாதியந்தமும் பெற்று இரண்டற்றப் பதவியாகுஞ் சமாதிநிலையாந் திருக்கோயிற் கொண்டு யினிது விளங்கும் மஹான் சாங்குசித்த சிவலிங்க நாயனாரென்னுங் குருசுவாமிகளின் பூங்கழலின்மேல், பிறவியாகிய சென்மக் கடலைத்தாண்டி சகச நிட்டையுடன் நிருவிகற்ப உபரதிவைராக்கியமாகிய பதமுத்தி சாதனையை யடையும்படி திருவருடந்தடிமைக்கொள்ளும்வண்ணம் விண்ணப்பமாக “தோத்திரமணிமாலை” யென்னும் பெயர்மருவிய துதிப்பாத்தொடையலைச்சூடி, தேகஞ்சிலிர்க்க பஞ்சபூதமொருவழிநிற்க கண்களிலானந்தநீர்ப்பெருக மனப் புளகாங்கிதமுடன் கசிந்துருகி அன்புமேலிட்டு வணங்க நினது திருவருட் கடைக்கணித்து எடுத்த நூலானது யினிதுமுடியும்படி கிருபைபாலித்தருளல் வேண்டும் சரணாரவிந்தத்திற்கு நமஸ்தே நமஸ்து என்பதாம்.

(ஞானார்த்தபத முடிவுரை.)

இரண்டற்ற நிலையென்பது எதுவரையினு மேற்படவில்லையோ அதுவரையினும் (தர்ப்பணமாகியக் கண்ணாடிவேறு, சாயல்வேறு, என்று நிச்சயிக்கப்படுகின்றதைப்போல வஸ்து நிர்ணயம் பண்ணுகின்றவரையினும் சுருதிவழியிலே நின்று குருவின் போதனையாம் பக்குவத்திற் பூர்த்தியாகி சுவானுபவமுதித்துத் தன்னைமறந்தத் தன்மையிலே (பாம்பானது தன்பருவத்தின்படித்தனது சட்டையைக் கழட்டிக்கொள்வது நிதர்சனமாகின்றவண்ணம்) அதிதீவிரதர பக்குவமானது உண்மையிலே முடிந்தநேரம் சருவமுமொன்றாக யெண்ணுதலே முடிந்தமுடிவினிடம். அவ்

வணமேற்படும் வரையினும் மனஞ்சிதையாது ஈஸ்வரபக்திச் செய்வது பெரியோரால் நிச்சயிக்கப்பட்ட அனுபவார்த்த தீபிகையின் கிரமவரிசை யெனப்பெறப்படும்.

(வாக்கியஸ்தாபனம்)

வேதமுத லாகமபுராணமிதி காசமுதல் வேறுமுள கலைகளெல்லாம்
மிக்காகவத்துவித துவிதமார்க்கத்தையே விரிவாயெடுத்துரைக்கும்
ஓதரிய துவிதமே யத்துவித ஞானத்தை யுண்டுபணு ஞானமாகும்
ஊகமனுபவம் வசன மூன்றுக்கு மொவ்வுமீ துபயவாதிகள்சம்மதம்

எனவும் ஒருநூலை மறுக்கவாயினும், ஸ்தாபிக்கவாயினும் ஏற்படும்பட்சத்தில் அவைகள் தம்தம் நோக்கத்திற்கும் சுகத்திற்கும், அதாவது "மாறுபடு தர்க்கந் தொடுக்கவறிவார் சாண், வயிற்றின் பொருட்டதாக" என்பதற்கொப்பயிராமல் மூதனூல், வழிநூல், சார்புநூல், என்பதற்கு முரண்படாதிருத்தலே சிறந்த அறிவினிடமமைந்துள்ள உண்மைப்பொருளெனவும் விதித்துள்ளதே சான்றாகக்கொள்ளல்வேண்டியதே யதார்த்த வடிவமாம். இவற்றையே சுருதி, குரு, சுவானுபவம், எனஸ்தாபிக்கப்பட்டதை அபக்குவிகள் தவிர பக்குவிகளே யேற்பரென வெள்ளிடைமலைபோல் விளங்கும்.

——o——

நாயனாரின் துதி.

கோச்சகக் கலிப்பா.

மூலமும், விருத்திக்காரண உரையும்.

சித்திமலிப் பரம்பொருளே தினகரனைப் போலொளிருங்
கர்த்தவ்யத் திருவுருவே கற்பகமே கருதரிய
முத்திக்கோர் வித்தான முதலவனே தொழும்பர்க்கு
டித்திக்குஞ் செந்தேனே சிவலிங்க தேசிகனே. (க)

(இதன்பொருள்) அகண்ட சைதன்ய நித்தியானந்த வைபவங்களாகிய இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை தியானம், சமாதி, யென்னும் அட்டாங்க யோகமாகிய மேலானப் பயனிற் சிறந்து விளங்காநின்ற தெய்வ வஸ்துவே, தன்னை யபயமென் றடைந்த சருவான்மாக்களிடத்தும் யதார்த்த வடிவமாய் வியாபித்து அடியாருடைய பாபச்செயலையெல்லாம் அருட்பார்வையினால் சுட்டெரித்து சத்கரும பரிபாலிக்களாக்கும் ஞானச்சூரியனே, மானிடஸ்தூலத்தைத்

தாங்கி கடவுட்சொரூப யிலக்கணமாகிய லட்சணத்தை அந்தரங்கத்தில் தன்னையடைந்த பக்குவிகட்குமாத்திரம் தெரிந்து வழிபடுமாறு குருவா யமைந்துள்ள அருளாதீத வடிவமே, அடைந்தவர்க்கு வேண்டுவனவாகிய எல்லாப்பொருளையுந் தளராது கொடுக்கும் வள்ளலாகிய அதிமகிமை நிறைந்த ஜீவாற்பிதமே, சாமான்யமான புத்தியினுற் கண்டுப்பிடித்து முடிவினை தெரிந்துக்கொள்ளக்கூடாத மோட்சமென்னும் மங்களாகார மாகிய பேரின்ப சிவஞானப் பூமியாகிய அதீதானந்த கைலையாம் இரண் டற்ற சாயுஜ்ய பதவிக்கு ஆரம்பமான சகசநிட்டைக்கு ஆதியாயுள்ள கரு விற்குத் தலைவனே, எல்லாம் நினது செயலென நம்பி சதாவழிபடும்படி யான மெய்த்தொண்டர்கட்கு நினைக்குந்தோறும் ஆனந்தமேலிட்டு (பா சம், பாசை, பசை, பசி) என்னுமிவற்றின் தொந்தார்த்தத்தால் மனம் பேதலித்துப் பசியினுல் வாடாது அவ்வானந்தமே பூர்வ வாசனையாகியத் தொல்லையை யகற்றும்படியாக இனிக்குஞ் சிவந்த நறவே, அடியார்களை இரட்சிக்கும்பொருட்டு சமாதியென்னுந் திருக்கோயிற்கொண்டு விளங் குஞ் சிவலிங்க குருமூர்த்தியே என்பதாம்.

(வாக்கியார்த்த உரை.)

உடலை நிலைப்படுத்துவதற்கு கொழுமை நிறைந்த உயர்தரப் போச னமே அதியாவசியகரமென வேண்டாது கிடைத்தற்கூடிய பொசிப்பை யேற்றலும், அவையின்றேல் காய், கனி, இலை, சருகு, சலம், வாய்வு, எவையென்கினும் மனப் பேதமின்றி யேற்று எல்லாந்தன் சொரூபமே யெனவுன்னி நிரதிசயானந்தமென்னும் சமாதிநிலையிலிருப்பதே சீவமுத் தரிலக்கணமாம். (மனமோய்ந்தவிடமே சமாதியெனப்படும்.)

பகரரிய பிரம்மநிலைப் பற்றினவர்ப் பற்றுநெறி
சுகஞானச் சுருதியதைத் துணைக்கொண்டார்த் துயரண்டார்
மகவென்னு மடியவர்க்கு வாழ்வுதரும் வல்லமைக
டிகழ்பவனே சாங்குசித்த சிவலிங்க தேசிகனே. (௨)

(இதன்பொருள்.) சருவசாத்திரங்களிற் பாண்டித்யமுடைய பண்டி தர்களாயினும், பாலைப்பாலென்றும், சலத்தை சலமென்றும், பொன்னைப் பொன்னென்றும், மண்ணை மண்ணென்றும், பொய்யைப் பொய்யென் றும், மெய்யை மெய்யென்றும், அறியுந் திறமையும் போந்த அறிவும் உடைத்தானவர்களெவர்களோ அவர்களே எப்பொருட்களையு முண்மை யிலேயே ஆராய்ந்துணர்ந்தவர்களாவரென்பது சாட்சியமா யனுபவத்திற் கேற்படுவதுபோல, சகல கேவலங்களையுங்கடந்து முமூட்சுயிலக்கணத் தைப் பின்பற்றி அப்படியை எவ்விதவவசரத்தும் வழுவாது அங்ஙன

மடைந்து ஆனந்திக்கத்தக்க பரமசொரூப நித்தியானந்தலட்சண சுழுச்சியின்போகத்தைக் கைக்கொண்டவரடைந்த பிரமாணத்தை (மாய்மாலமுடன் சாமானிய சிந்தையுடையவர்கள் சொல்ல வெவ்விதத்துங் கூடாதான) சாஸ்விதானத்த பேரறிவினிடத்துதிக்கும் சத்திய வாசகத்தை ஆதரவாகக்கொண்டவர்களே சனனவாதனையைச்சேராரென்றபடி நம்பியுள்ள பிள்ளைகளாகியத் தொண்டர்கட்கு வேண்டிய இகபர சுகத்தைக் கொடுக்கக்கூடிய பராக்ரமமாகிய வலிமையென்னும் அருள்விளங்குகின்ற சாங்குசித்த சிவலிங்க குருமூர்த்தியே என்பதாம்.

யதார்த்த விளக்கம்.

பெற்றோர்களால் பிள்ளைகளடையும் பலனைப்போல, மஹான்களாயுள்ள சீவமுத்தர்களையும், அன்னோர்களா லெழுதியுள்ள சிவஞான சித்தாந்தமாகிய சாத்திரங்களையும் பின்பற்றினர் பிறவிக் கடலைத்தாண்டி எங்கும் யாதார்த்தவடிவமாக நித்தியமாய் விளங்குவாரென்பதேயாம்.

காரருளு மஞ்ஞானக் காடதனைத் தான்திருத்திப்
போரருளு மூழதனைப் போக்கிடவே யெம்முருவாய்த்
தாரணியி லேசனித்து சாந்தபதவ் யோமநிலைச்
சீரருளிக் காக்கவந்த சிவலிங்க தேசிகனே. (௩)

(இதன்பொருள்.) இருளினிடமாக ஒளியென்பது எங்ஙனந்தோற்றமாட்டாதோ அதைப்போல பாவத்தை விளைவித்து சனனமென்னும் பிறப்பை உண்டுபண்ணுகின்ற இருள்நிறைந்த தொல்லைக்கிருப்பிடமாகிய அறியாமையென்னும் மாயமனயாகிய வனத்தினுள்ளே தானென்னுமகங்காரத்தினாற் றலையெடுத்தாடும் பஞ்சபூதங்களை யடக்கி அவைகளினிடமாக வுண்டான அசத்தியக்காரியங்களைப் பின்னுஞ்செய்து வாதனையடையாது நற்போதனையிலாட்பட்டுவர வழிப்படுத்தி சீவனாகிய ஆத்மார்த்தமானது ரட்சண்யத்தை யடையவும் வினையென்னுஞ் சூராவளியோடு யுத்தத்தைக் கொடுக்காநின்ற பூர்வவாசனையை நீக்கும்படியாகவே (தெய்வகண சொரூபலட்சண பரமாம்ஸ அவதாரமான சீவேஸ்வரராகிய சுவாமிகள்) யாதொரு நன்மையிலுமீடுபடாது பாபாத்மாவாக கடத்தைச் சுமந்து திண்டிக்கே யிரவுபகலாயுழைத்து பெரியோர்களாகிய நல்லோர் சாபத்தையேற்று எடுத்தசனனத்திற்கு ஒரு பலனையுமடையாது வாளாய் மடியத்தக்க நடைப்பிணமாக விராநின்ற எனதுச்சாழலாய் அதாவது வெளிப்பார்வையிலே கர்ப்பூரமும் கடலுப்பும், சத்தியரும் அசத்தியரும், ஒன்றாய்த்தோற்றுவதுபோல, மானிடச் சட்டையைத்தாங்கிப் பிறந்து எந்தவிதத்தும் சிறிது பேதமுங்காட்டாது அளவுகடந்த தபோபலமாகிய

புண்ணிய விரதத்தினாலும் கிடைத்தற்கரிய நிரதிசயானந்தர்களென்னும் முமூட்சுகளுக் கிருப்பிடமாகிய வியோக தத்துவாதீத பரிபூரண சுத்த சாதாக்கிய சிவஞானபீடத்தை அடியார்கட்குக்கொடுத்து வினையினிடஞ் சாராம லாதரிக்கும்படி காருண்யத்தோடு உலகினிடமாக திருவுருகொண் டெழுந்தருளிய சிவலிங்க குருமூர்த்தியே என்பதாம்.

ஞானூர்த்தபத முடிவுரை.

இருளைநீக்க விளக்கும் சமுத்திரத்தைக்கடக்க மரக்கலமும் எப்படி அவசியகரமோ அதைப்போல பிறவியென்னுங்கடலைத் தாண்டுவதற்கும் அஞ்ஞானத்தைக் கெடுப்பதற்கும் நித்தியமாகிய இரண்டற்றவாழ்வைக் கொடுப்பதற்கும் பரம வள்ளலாகிய ஞானபானுவென்னுங் குருமூர்த்தியே முக்கியமாக வேண்டியவராதலானும் (மீகாமனில்லா மரக்கலமோடாது) என்பதைப்போல் குருவில்லாமல் யாதுஞ்சித்திபெற முடியாதாதலானும் அவ்வண்ணம் உருத்தாங்கிவந்துள்ள ஆசாரியரை நம்போல் சாமான்யமாக நினையாது நம்மைப்பாபவழியிலே பிரவேசிக்காமல் தடுத்து அந்தரங்கத்திலே சொல்லாமற் சொல்லப்படுகின்ற அருமையான ஒரு மொழியினாலே நமது பூர்வசன்ம கன்மமாகிய விறகை அவரது அருட்பார்வையென்னும் நெருப்பினால் சுட்டெரித்து நிரதிசயானந்தபோகத்தை கொடுக்கும் கற்பகமாகிய ஔடதமாவார். அதாவது பிறந்தாலுமிறவாதிருக்க மருந்துண்டுயென்ற உபரதிவைராக்கியமாகிய சிவஞான சித்தாந்தத்தை ஸ்திரப்படுத்தி குருவை வழிபாடுசெய்ய உபதேசமாக நிச்சயிக்கப்பட்டது.

"மூர்த்தந் தலந்தீர்த்த முறையாய் நடத்தினர்க்கு
வார்த்தை சொல்ல சற்குருவும் வாய்க்கும்" எனவும்
"தேசிக மூர்த்தமாக சீவர்கள் பக்குவந் தெரிந்து" எனவும்
"அருளே குருவாம் அவனே பரமாம்
அன்பே சிவமாம் அறிவாலறிவை யடைந்தார் தனக்கே"

எனவுங் கூறியுள்ள யெண்ணிறந்த அருள்வாக்கியமாகிய திருமொழிகளே சான்றும் (சீடனடையவேண்டிய பக்குவகால வநுட்டான தீவிரதரமானதும், ஆசாரியரும் அவரவர்செய்த பூர்வ கர்மதர்மத்தின்படி வாய்க்குமெனலால் கன்மத்தால் கபடுநிறைந்து மாய்மாலங்காட்டி உலகை மயக்கும் வேடதாரிகளாகிய பொய்க்குருவும், புண்ணியத்தினால் யாதொருபற்றுமில்லாது சாமானியர்களைப்போல் தன்னையடைந்தாரை காக்கும்பொருட்டும், கரையேறப்படாது அஞ்ஞானப் படுகுழியில் கிடந்தலையானின்ற சீவர்களை தடுத்தாட்கொள்ளும்படியும், தன்னைக் காட்டிக்கொள்ளாது

"வேர்த்தால் குளித்து பசித்தால்புசித்து விழிதுயின்றப்
பார்த்தா லுலகத்தவர்போ லிருப்பர் பற்றற்றவரே"

என்னும் நிலைக்குட்பட்ட மெய்க்குருவும் வாய்க்குமென்பதாம். அங்ஙன மின்றேல் தவத்தின்குறைவென்பதாகவெண்ணி நலமடையுமாறு முயற்சி யெடுத்து அடங்கியுழைத்தல்வேண்டும். அவையுஞ் சிந்தைநெறிபோத் சிவம் விளங்கும், சிவம்விளங்க தவந்தானம் பலிக்கும் அவைபலிக்க ஞான முதிக்கும், அவையுதிக்க அனுபவித்த பழைய வாசனைகளென்னென் னவோ அவையெல்லாமுற்றும் நீங்க (தானதுவாகத் தானுனே) அப் படியாகும்படி வேறொருவரால் கொடுக்கமுடியாத தற்சுதந்தர விதேக தேகமாகிய என்றுமழியாத சுகத்தை (தானேதந்தனம்) அப்பரமாசாரிய பானுவானது அடியார்களை புண்ணிய வசத்தின்படி ஞான வமிழ்தை யூட்டி ரட்சித்தருளுவர் அவ்வுண்மைப்பொருள் கைக்கூடினபோதுதான் (தானேதானே தந்தனம் தனுதிதானே தந்தனம் தானுனே தந்தனம்) எனவும் "ஆனந்தபோகத்தி லமுத்துவித்தான் காணேடி" எனவும்

"தெய்வம் வேறுள தென்பவர் சிந்தனை
யைவ ரென்பது நற்பர தற்பர
சைவ சிற்சிவனே யுனைச் சார்ந்தவ
ருய்வ ரென்பது யானுணர்ந்தே வுற்றேன்" என்பனவும்

இன்னுமளவிறந்த சாட்சியத்தின்படி குருமூர்த்த யிலக்கணத்தை சிரமேற் றாங்கி யெடுத்த பிறவிப் பயனடையுமாறு தோத்திரமணி மாலையாகத் துதிக்கப்பட்டது.

போற்றிக் கலிவிருத்தம்.

நீங்கரிய மெய் நிட்டையு ளோங்கிய, சாங்கு சித்த சிவலிங்க சற்குரு
பாங் குடையப் பரம சொரூபன்சீ, ரோங்கும் பாதம் போற்றி மூவுலகமே.

வாழி விருத்தம்.

ஐங்கர விநாயகனு மரனுமை சண்முகனு
மம்மைவள்ளி தெய்வானை நவகணங்கள் மயில்வேல்
துங்கதிரு ஞானசம் பந்த சுவாமியுடன்
சொல்லரிய அப்பர்சுந் தரர்மணி வாசகருந்
தங்குபுக ழுடன்மகிமை நிறைசிவ முத்தரெனுஞ்
சாங்குசித்த சிவலிங்கதே சிகர்வெண்ணீறக் கமுஞ்சி
ரெங்கும்பணி சிவகணேச பக்தரு முதவிசெ
யெழிலன்பரித் துதியுடன்மெய்ப் புலவரும் வாழியவே.

நாயனரின் தோத்திரமணிமாலை ஸமாப்தம்.

திருச்சிற்றம்பலம்.

☞ அன்பர்கள் கவனிக்க எஞ்சியுள்ளவை பின்னரே வெளியிடப்படும்.